# மண்புழு உரம் தயாரித்தல் "நார்டெப்" முறை

**நிலை 1.** முதலில் நமக்கு தேவையான இடத்தை சமமாக ஆக்கிக் கொள்ளவும்

**நிலை 2.** முதல் அடுக்கு பாலித்தீன் ஷீட் அல்லது பழைய பிளாஸ்டிக் ஷீட்டை விரிக்கவும்.

**நிலை 3.** அதன்மேல் ஒரு அடுக்கு நன்கு காய்ந்த தேங்காய் கரம்பலை அதன்மீது நார்பகுதி மேலாக இருக்கும்படி நெருக்கமாக பரப்பவும்.

**நிலை 4.** பின்பு அதன் மேல் சாணக் கரைசலை அல்லது (சாண எரிவாயு கழிவை) அதன் மீது தெளிக்கவும்.

**நிலை 5.** பின்பு நன்கு மக்கிய (அழுகிய) காய்கறிக்கழிவுகள், விவசாயக் கழிவுகள் (மண்புழு எதை எல்லாம் எளிதாகசாப்பிடுமோ அதை எல்லாம்) அதன்மீது 2 அல்லது 2.5 அடி உயரத்திற்கு போடவும்.

**நிலை 6.** அதன்மீது தண்ணீர் தெளிக்கவும் இரண்டு நாட்கள் அப்படியே விட்டு விடவும். (ஈரம் காயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்)

**நிலை 7.** இதற்கு மேல் ஒரு சதுர அடிக்கு 100-200 மண்புழுக்கள் என்ற விகிதத்தில் மேல் பரவலாக மெதுவாக மண்புழுக்களை விடவும்.

**நிலை 8.** அதன்மேலாக நனைத்த சணல் சாக்கை (கோணி) கொண்டு மூடவும்.